## தலைப்பு 114 – போக்குவரத்து அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போக்குவரத்து அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் போக்குவரத்து அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான போக்குவரத்து அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான போக்குவரத்து அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறனை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் திறைசேரிக்கு மேற்கொண்டிருந்த நேர்க் கொடுப்பனவுகள், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்காமையால், போக்குவரத்து அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் இடையே ரூபா 115,854,907 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | தவறு அல்லது குற்றமொன்றல்லாதுடன், 2021 வருட இறுதியில் ஆசிய அபிவிருத்தியினால் நேர்க் கொடுப்பனவு (Direct Payment) திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் அந்த ஆண்டிக்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்காமை மற்றும் 2020 ஆண்டிறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த நேர்க் கொடுப்பனவு திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் 2021 ஆண்டிற்காக கணக்கீடு செய்தல். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது செயற்திட்ட அலுவலகத்தினால் தமது வரிசை அமைச்சுடன் நிதி ஆண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு செலவுகள் மற்றும் கடன் அறிக்கை தொடர்பாக இணக்கமொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 செலவு விடயங்களில் தேறிய ஏற்பாடுகளாகிய ரூபா 668,500,000 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 389,795,882 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு தேறிய ஏற்பாடுகளின் நூற்றிற்கு 46 முதல் நூற்றிற்கு 96 இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | அமைச்சு அலுவலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை விட உள்ளவாறான பதவியணி குறைந்த எண்ணிக்கையாக காணப்படல் அமைச்சுக்களின் செலவுகளை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துவதன் மூலம் செலவுகளை வரையறுத்தல் மற்றும் 114-2-3-02-1509 செலவு விடயத்தில் சேமிப்பிற்காக நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காரணத்தினால், சமூக நலன்புரியை முக்கியமானதாகக் கொண்ட செயற்திட்டங்களுக்காக (சிசு செரிய) கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையால் ஏற்பாடுகள் சேமிக்க நேரிட்டிருந்தது. | தேவைப்பாட்டினை உரிய முறையில் இனங் கண்டு பாதீட்டு மதிப்பீடு முடிந்தளவு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செலவு விடயம் 114-2-3-11-2506 உட்பட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் ஸஹஸர பஸ் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 400,000,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் நி.பி. 66 மூலம் ரூபா 118,882,612 தொகை ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்ட பின்னரும் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் வினைத்திறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் ரூபா 209,892,341 இற்கான ஏற்பாடுகள் மேலும் சேமிக்கப்பட்டிருந்தன. | "அரச செலவுகளின் மீளாய்வு" என்ற தலைப்பில் நிதி அமைச்சர் சமர்ப்பித்திருந்த 2021.08.28 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பந்தி 02 இன் (i) மற்றும் (ii) அறிவுரைகளின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறனை மேம்படுத்தல் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் ரூபா 3,200 மில்லியன் தொகையும் உள்நாட்டு நிதிய ஏற்பாடுகளின் கீழ் ரூபா 235 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு நிதிய மூல வளத்தின் கீழ் செலவிடப்படல் ரூபா 96 மில்லியன் தொகை எனப்படும் 41% ஆக அளவு காணப்பட்டது. அதேபோல் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியத்தின் கீழ் காணப்பட்ட ஏற்பாடுகளில் இருந்து செலவிடப்பட்ட தொகை ரூபா 2012 மில்லியன் தொகை மாத்திரமாக காணப்பட்டமையால், மற்றும் ஒட்டுமொத்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் குறைவாக பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் பாரப்படுத்தல் கட்டணம் என ரூபா 83 மில்லியன் தொகை என மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்தப்பட்டிருந்தது. | 114-2-4-10-2104-12<br>2021 செலவுகளின் படி உள்ளவாறான செலவுகள் குறைவடைந்திருந்தமையால் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது.<br><br>114-2-4-10-2104-17<br>2021 செலுத்த வேண்டிய வரித்தொகை குறைவடைதல், பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள் மற்றும் காணிகள் உரித்தாக்கல் குறைவடைந்திருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.<br><br>114-2-4-11-2104-17<br>உடன்படிக்கைகளுக்கு அனுகுதலில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக வெளிநாட்டு நிதியங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் 2021 ஆண்டின் போது மேற்கொள்ளப்படவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்திற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்பாடுகளின் கீழ் ரூபா 350 மில்லியன் தொகையும், உள்நாட்டு நிதிய மூலவளத்தின் கீழ் ரூபா 1578 மில்லியன் தொகையும், ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தில் புகையிரதப் பாதைகளின் இரு மருங்கிலும் குடியிருப்பவர்களை மீள்குடியேற்றல் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக உள்நாட்டு நிதியத்தினை பயன்படுத்தல் ரூபா 264 மில்லியன் தொகை எனப்படும் அந்த ஏற்பாடுகளில் 17 சதவீதத்திற்கான தொகையை கொண்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2-2103-11 செலவு விடயத்தின் கீழ் புகையிரத செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் வழங்கும் செயற்திட்டம் 2018 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 6,362,730 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 02 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை செயற்படுத்துவதில் தாமதம் காணப்பட்டது. பின்னர், கொழும்பை அண்டிய செயற்திட்டத்தின் மூலம் செயற்திட்ட குறிக்கோள்கள் அடங்குகின்றது என அவதானிக்கப்பட்டமையால், செயற்திட்டத்தை முடிவுறுத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஆண்டிற்காக இந்த செயற்திட்டத்திற்கு ரூபா 21,000,000 தொகை ஏற்பாடு மேற்கொள்ளபட்டிருந்ததுடன், அந்த மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | இந்த செயற்திட்டம் 2019 ஆண்டு ஆரம்பம் முதல் செயற்படாது காணப்பட்டதுடன், கொழும்பை அண்டிய புகையிரத பாதைகள் செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் REIP ஊடாக புகையிரத ஓட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியும் என அறிக்கப்பட்டமையால், இந்த செயற்திட்டம் தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் அபிவிருத்தி மற்றும் ஆய்வு நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கான பரிந்துரைகள் பெற்றுக்கொள்வதற்காக 2021.07.06 திகதிய கடிதத்தின் மூலம் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலைமைகள் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்கண்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2012 செப்தம்பர் 01 திகதி சேவை இடைநிறுத்தப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 121,945 இற்கான கணக்கு மீதியொன்று 09 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் தொகை செலுத்துவதற்காக செயலாளரினால் 06 மாத சலுகைக் காலம் வழங்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்றுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடம் 06 வருடங்கள் முதல் 09 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 398,702 இற்கான கடன் மீதியொன்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (இ) | 2020 மார்ச் 01 திகதி ஓய்வு பெற்றிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 48,515 இற்கான இடர் கடன் மீதியொன்று 1½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பெண் உத்தியோகத்தர் இறந்துள்ளதுடன், அவருடைய விதவைகள் மற்றும் அனாதைகள் இலக்கத்தை பெற்று ஓய்வூதியக் கோவையை தயாரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு** | | **இணக்கமின்மை** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாண இலக்கம் 571(இ) | காலவதியான ரூபா 10,000 இற்கான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாண இலக்கம் 880 | பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களையும் இனங் கண்டு பிணையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் பிணைப் பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிணை வைப்புச் செய்ய வேண்டும் மற்றும் பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

### 2.4 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 114-2-3-9-2506 இலக்க செலவு விடயத்தின் கீழ் ரூபா 37,439,339 தொகைக்கான செலவொன்று தொடர்பாக கணக்காண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாட்டு எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | ஏற்பாட்டு வரையறையை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது 114-2-3-9-2506 செலவு விடயத்தில் மாத்திரம் காணப்பட்டதுடன், ஏனைய செலவு விடயங்களில் ஏற்பாட்டு வரையறையுள் பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | மீளாய்வாண்டிற்கான ஏற்பாட்டு வரையறையில் செலவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **வெளிநாட்டு உதவி ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்கள்** | | |
| கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் மூலம் கொழும்பை அண்டிய புகையிரத சேவையை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை போக்குவரத்து அமைச்சிற்கு 2021 மார்ச் மாதம் அளவில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த சாத்தியக்கூறு அறிக்கைகளின் பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவு செயற்படுத்துவதற்கு ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. 2021 திசெம்பர் 31 திகதி அளவில் இந்த சாத்தியக்கூறு அறிக்கை தயாரிப்பதற்காக ரூபா 1,446,952,381 தொகையும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கடன் வட்டி என ரூபா 69,345,336 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகைக்கான முதலாவது தவணைப்பணம் 2022 மார்ச் 15 திகதி 275,000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியிருந்தது. | 2021.06.10 திகதி கௌரவ பிரதமருடன் நடாத்திய கலந்துரையாடலில் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கும், செயற்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியம் ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. | பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தாமதம் இன்றி ஏற்பாடு செய்ய வேண்டும். |

### 3.2 உள்நாட்டு உதவி ஈடுபடுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல்

(அ) குருநாகல் ஹபரன ஊடாக புகையிரதப் பாதை செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | குருநாகல் தம்புள்ள ஊடாக ஹபரன வரை உத்தேச புகையிரதப் பாதை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக 2010 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் உள்நாட்டு நிதியத்தின் கீழ் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 1,032,757,000 இற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 46% மாத்திரம் செலவிடப்பட்டு 54 சதவீதம் ஆகிய ரூபா 555,906,008 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | ஆரம்பப் பொறியியல் வேலை அளவை செய்தல் டிரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேற்கொள்வதற்கும், 2 ஆவது பிரிவின் கீழ் நில அளவையாளர்களின் அளவைகள் ஊக்குவிப்பு கொடுப்பனவிற்கு மாத்திரம் வரையறுக்கக்கூடிய விதமாக குறைத்து கொடுப்பனவு செய்வதற்கும், நீரியல் ஆய்வு அலுவல்கள் மற்றும் மண் பரிசோதனை விடயங்கள் செயற்திட்ட முன்மொழிவாளரினால் அரசாங்கத்திற்கு செலவுப் பொறுப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட்டமையால், ஏற்பாடுகளில் சேமிப்பு காணப்பட்டதுடன், அந்த சேமிப்பை இனங்கண்டவுடனேயே ஏற்பாடுகளை தேவைப்படும் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றப்படல் திறைசேரியின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. | பாதீட்டு ஏற்பாடுகள் வினைத்திறனுடன் குறிப்பிட்ட கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன், வெற்றிகரமாக பூர்த்தி செய்யக்கூடிய ஏனைய அரசாங்க செயற்திட்டம் ஒன்றிற்கு அந்த ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | இத் திட்டத்தின் மூலம் 2024 ஆண்டளவில் 4090 காணித் துண்டுகள் உரித்தாக்கப்பட்டு நட்டஈடு செலுத்துதல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 ஜனவரி 24 திகதி வரை அவற்றில் 3 சதவீத எண்ணிக்கையான 133 காணித் துண்டுகளுக்காக மாத்திரமே நட்டஈடு செலுத்தி பூர்த்தி செய்திருந்தது. | நட்டஈட்டு விசாரணை நடாத்துவதற்காக காணி உரிமையாளர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பிரதேச செயலகங்களுக்கு காணி உறுதிகள் மற்றும் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் COVID நிலைமையின் காரணமாக அலுவலகங்கள் மூடுவதற்கு நேரிட்டது. பயணக் கட்டுப்பாடுகள் காரணத்தினால் ஆவணங்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டமையால் நட்டஈட்டு விசாரணைகள் நடாத்தி முடிப்பதற்கு முடியாமல் போனது. | செயற்திட்டம் வினைத்திறனுடன் மற்றும் தாமதம் இன்றி நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2010 ஆண்டின் போது தொழிற்படு செயற்திட்டம் ஒன்று என ஆரம்பிக்கப்பட்டிருந்த குருநாகல் ஹபரன புகையிரதப் பாதைச் செயற்திட்டம் 2024 ஆண்டளவில் 4090 காணித் துண்டுகள் உரித்தாக்கப்பட்டு நட்டஈடு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டு காணிகள் வெற்றிடமாக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தின் குறிக்கோளாகிய குருநாகல் முதல் ஹபரன வரையான புகையிரதப் பாதை நிர்மாணிப்பதற்காக 2022 ஆண்டளவில் குறிப்பிட்ட முதலீட்டாளர்களை அல்லது நிதியம் பெற்றுக்கொள்ளக்கூடிய மூல வழங்கலை இனங் கண்டிருக்காமை 2022 பெப்ரவரி 11 திகதி அளவில் நிதிசார் உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருக்காமையின் காரணமாக புகையிரதப் பாதையின் நிர்மாண வேலைகள் உறுதியற்ற நிலைமையில் காணப்பட்டது. | 2018 ஆண்டின் போது சீனக் கம்பனி ஒன்றுடன் வாணிப உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்துடன், 2022 ஆண்டின் போது நிதி உடன்படிக்கை மேற்கொள்ளும் தேவைப்பாடு போக்குவரத்து அமைச்சரினால் நிதியமைச்சருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, வெளிநாட்டு மூலவள திணைக்களம் தேவையான விபரங்கள் பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறிப்பிட்ட செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். |

**3.3 ஒன்றிணைந்த செயற்திட்டத்தின் செயலாற்றுகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டு முதல் 2021 திசெம்பர 31 வரை ஒன்றிணைந்த செயற்திட்டத்திற்காக ரூபா 194.94 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்ட காலத்தில் மூன்று வருட காலத்தை கடக்கும் சந்தர்ப்பத்தில் ஒட்டு மொத்த செயற்திட்ட மதிப்பீடாகிய ரூபா 26,860 மில்லியன் தொகையில் அதாவது 0.72 சதவீதமாக காணப்பட்டது. அதேபோல் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவுகளில் ரூபா 150 மில்லியன் தொகை நிருவாக செலவுகளுக்காகவும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்காக G.P.S இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 28 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2018 செப்தம்பர் மாதம் வரை செயற்திட்டத்திற்காக பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், ஒன்றிணைந்த செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் சட்டகம் மற்றும் வேலைத் திட்டத்தை தீர்மானிக்கும் அமைச்சரவை அங்கீகாரம் 2018 ஒக்தோபர் மாதம் கிடைத்திருந்தது. அதன்படி, 2018 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500 மில்லியன் தொகை ஏற்பாட்டினை செலவிடுவதற்கு முடியாமல் போனது. 2019 செப்தம்பர் 24 திகதிய 5/2019 இலக்கம் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் அடிப்படையில் அனைத்து பெறுகைகளும் இடைநிறுத்தப்பட்டமையால் 2019 ஆண்டின் போது செயற்பாட்டுச் | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் வினைத்திறனுடன் ஈடுபடுத்தி எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ளல் மற்றும் ஏற்பாடுகளை உரிய முறையில் ஈடுபடுத்தாமையால் ஏனைய செயற்திட்டங்களுக்கு இதனை ஈடுபடுத்துவதற்காக இழக்கும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுகள் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலக்கம் 2016/1 கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் படி ''ஒன்றினைந்த'' செயற்திட்டத்தின் நிருவாக அலகிற்கு உதவி செய்வதற்காக உரிய அறிவு மற்றும் அனுபவம் உடைய நிறுவனங்களின் பதவியணியினரின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் முறையான பதவியணி ஒன்று நியமனம் செய்வதற்கு 2022 பெப்ரவரி 21 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. செயற்திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 47 பேராக இருந்த போதிலும் உள்ளவாறான பதவியணி 16 ஆக காணப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | தேவையான குறைந்த பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் MCC(மில்லேனியம் செலேன்ஞ் கோபரேஷன்) உடன்படிக்கையின் கீழ் 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்பாடுகள் வழங்குவதற்கு இணங்கி இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் பின்னர், MCC(மில்லேனியம் செலேன்ஞ் கோபரேஷன்) உடன்படிக்கை கையொப்பமிடப்படாமையால் செயற்திட்டத்திற்கான நிதியம் ஏற்பாடு செய்வதற்கான நடைமுறை ஒன்று இனங் காணாமல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் வெளிநாட்டு கடன்கள் அல்லது மானியங்களின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பாரக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மொத்த செயற்திட்டத்திற்கான முதலீடுகள் உள்நாட்டு நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட | பதில் வழங்கியிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக முறை பிரகாரம் நிதியம் ஏற்பாடு செய்யும் நடைமுறை ஒன்று தயாரித்துக்கொள்ள வேண்டும். |

காரணத்தினால் செயற்திட்டத்தின் முன்வரும் அலுவல்களின் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டிருந்ததென அவானிக்கப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களின் பொறுப்பில் காணப்பட்ட 04 வாகனங்களை முறைப்பிரகாரம் விடுவிப்பதற்கு அல்லது அந்த வாகனங்களை மீண்டும் அமைச்சுக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அமைச்சின் விடயப் பரப்பு மாறும் சந்தர்ப்பங்களில் அமைச்சுப் பதவியணியினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த வாகனங்களையும் உரிய முறையில் மீண்டும் ஒப்படைத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனங்கள் ஏனைய அமைச்சுக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் இந்த அமைச்சுக்கு ஒப்படைக்கும் படி பல தடவைகள் கடிதம் அனுப்பப்பட்ட போதும் குறிப்பிட்ட வாகனங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை முறைப்பிரகாரம் விடுவிப்பதற்கு அல்லது உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. |
| (ஆ) | அமைச்சினால் முறையான உரித்தாக்கல்கள் மேற்கொள்ளப்படாமல் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்த 02 வாகனங்கள் அப்புறப்படுத்த வேண்டிய மட்டத்தில் காணப்பட்ட போதிலும் அவ்வாறு அப்புறப்படுத்தாமல் 2015 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | இந்த அமைச்சின் பெயரில் உரித்தாக்குவதற்காக கொம்டிரோலர் ஜெனரலின் அங்கீகாரத்தை பெற்று தற்போது ஓட்ட நிலையில் காணப்படாத நிலைமையிலுள்ள இந்த 02 வாகனங்களையும் உரித்தாக்கி அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | வாகனங்களை முறைப்பிரகாரம் உரித்தாக்கி அப்புறப்படுத்தும் துநடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 நட்டங்கள் சேதங்கள் பரிசோதனை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் ஏடுகளில் இருந்து பதிவழித்தல் மற்றும் அறவீடு செய்யும் 05 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 299,521 இற்கான நட்டம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 03 நட்டங்கள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 190,663 தொடர்பாக குறிப்பிட்ட சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான பதில் கிடைக்காவிடின் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் 02 விபத்துக்கள் தொடர்பாக ரூபா 108,858 இற்கான நட்டம் தொடர்பாக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முறைப் பிரகாரம் சேதத்தினை தீர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது விபத்துக்களுக்கு ஆளாகிய 04 வாகனங்களுக்கான நட்டங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த 04 விபத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட நட்டம் ரூபா 6,382,870 ஆகும். | உரிய முறையில் நட்டங்கள் சேதங்களை கணக்கீடு செய்ய வேண்டியிருந்தது. |
| (இ) | முன்னைய அமைச்சர் ஒருவரின் ஊடகச் செயலாளருக்கு எழுத்துமூலம் வழங்கப்பட்டிருந்த Asus vivo Book 178 Gen வகையைச் சேர்ந்த ரூபா 170,000 தொகைக்கான மடிகணினி அவரது பொறுப்பில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் 2021 ஜுலை 09 திகதி களவாடப்பட்டிருந்தது. இந்த நட்டம் தொடர்பாக நி.பி. 104(4) விசாரணை 2022 மார்ச் 28 திகதி வரை மேற்கொள்ளப்படாததுடன் குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய அமைச்சரின் ஊடகச் செயலாளரின் பொறுப்பில் இருந்த சந்தர்ப்பத்தில் காணாமல் போன மடிகணினிகள் தொடர்பாக நி.பி. 104(4) விசாரணை அலுவல்கள் நடாத்தப்பட்டு வருகின்றதுடன் விரைவாக விசாரணை பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் படி தாமதம் இன்றி விசாரணை அலுவல்களை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது மற்றும் உரிய முறையில் நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

## 4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக அமைச்சினால் உரிய இலக்குகளை இனங்காண்பதற்கும் அவற்றை அளவை செய்வதற்குத் தேவையான விவரக் குறிப்புக்கள் மூலப் பிரமாணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் போது மேற் கூறிய குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்த வேண்டியிருந்தது. மற்றும் தரவு அடிப்படை ஒன்றினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினை பரிசோதனை செய்த போது 7 பதவிகளில் 13 வெற்றிடங்களும் ஒரு பதவியில் 04 மிகைகளும் காணப்பட்டது. கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 2022 பெப்ரவரி 28 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய நிலைமை மாற்றம் அடைந்திருந்ததுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிதாக ஆட்சேர்ப்பின் படி 39 பேர் அமைச்சிற்கு இணைக்கப்பட்டிருந்தமையால் 08 பதவிகளில் 09 வெற்றிடங்களும் மூன்று பதவிகளில் 43 மிகைகளும் ஏற்பட்டிருந்தது. | அமைச்சில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பாக நியமன அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது போக்குவரத்து அமைச்சு மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளமையால் விடயப்பரப்பு விரிவாக்கப்பட்டுள்ள காரணத்தினால் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தி அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | புதிய பதவிகளுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும் சேவை தேவைப்பாடுகளின் மீது வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் தொழிநுட்ப பதவியணியில் 5 பதவிகளில் 09 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் காரணமாக இந்த காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் உரிய முறையில் தாமதம் இன்றி மேற்கொள்ளும் போது பல்வேறு சிக்கல்கள் உருவாகியிருந்தது. | அரசாங்கத்தில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக குறைந்த பதவியணியைக் கொண்டு செயற்திட்ட அலுவல்கள் நடாத்தி செல்லப்படுவதுடன் புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டிருப்பதனால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாத நிலைமை ஒன்று தற்போது காணப்படுகின்றது எனவும் அதற்கு மாற்று வழியாக தற்போது | தேவையான பதவியணி ஒன்று சேர்க்கப்பட்டு செயற்திறனுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அரசாங்கத்தினால் ஆட்சேர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலகங்களின் காணி அலுவல்களுக்காக உதவிகளை பெற்றுக் கொள்வதற்கு பிரதேச செயலாளர்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன்.